கிருஷ்ண
பிடாரன்
தமிழ் புராணப் படம்
டைரக்ஷன் சி.வி.ராமன் பி.ஏ.எல்எல்பி.
ஸ்டுடியோ. கோவை செண்ட்ரல்
GRAMS: FILMATIC
PHONE: 8155
T.K. புரொடக்ஷன்ஸ். 24-25. நரசிங்கபுரம் தெரு. மவுண்ட் ரோட், மதராஸ்.

— நடிகர்கள் —

கொத்தமங்கலம் சீனு	... அர்ஜுனன்
C. V. V. பந்துலு	... பிடாரன்
வைக்கம் மணி	... ஸ்ரீ கிருஷ்ணன்
S. K. வாசுதேவராவ், B A., B.L.	... தருமர்
C. S. தன்சிங்	... பீமன்
V. V. S. மணி	... நகுலன்
G. ராமநாதன்	... சகாதேவன்
G. சுந்தர பாகவதர்	... நாரதர்
K. R. நாகராஜன்	... பலராமர்
S. S. ராமுடு	... கருடன்
N. S. கிருஷ்ணன்	... பாகவதர்
பபூன் சங்கரய்யர்	... இடையன்
P. ராமய்யா சாஸ்திரி	... அவுல்தார்
ராமசாமி அய்யர்	... ,, மைத்துனன்

— நடிகைகள் —

B. சரஸ்வதி (மாயவரம் பாப்பா)	... மாயாராணி
P. A. ராஜாமணி	... திரௌபதி
K. K. கிருஷ்ணவேணி	... மாயப்பெண்
T. A. மதுரம்	... பாகவதர் மனைவி
P. S. ஞானம்	... இடைச்சி
சந்திராபாய்	... அவுல்தார் மனைவி

டைரக்ஷன் :
C. V. ராமன், B.A., LL.B.

உதவி டைரக்ஷன் :
S. K. வாசுதேவராவ், B.A., B.L.

வசனம், பாட்டு :
G. சுந்தர பாகவதர்

சங்கீத டைரக்ஷன் :
G. ராமநாதன்

Krishna Pidaran

SYNOPSIS

The Hindu idea of Bhakthi is an all powerful force before which even God is helpless. This is well illustrated in the story Krishna Pidaran which deals with the curbing of the pride of the Pandava brothers, Arjuna and Beema, who for a brief period after their great success in the Mahabarat war forget their indebtedness to Lord Krishna.

Narada taking advantage of this contrives to create mischief and induces Lord Krishna to teach a severe lesson to Arjuna and Beema, Krishna agreeing to this, transforms himself into a snake charmer and with Balarama transformed into a snake and Garuda as a horse, he goes to Indraprastha and there by several devices contrives to drag Beema and Arjuna into a bet in which they are defeated and as a consequence Arjuna is transported to a Maya Island where he is humiliated by the Maya Queen who is Lord Krishna himself in another form.

Bheema is hurled down to Nagaloka where he is kept as a prisoner, mocked at by tiny Naga Girls to his great humiliation and grief.

Nakula and Sahadeva who are true devotees of Lord Krishna take up the challenge in great devotion and succeed in rescuing their brothers through their appeal to Lord Krishna. Arjuna and Bheema are thus restored by their younger brothers to the sorrow-striken Dharma and Drowpathi, who realise in the end that the snake-charmer Pidaran is no other than Lord Krishna himself come to test them.

Narada derives the greatest pleasure of his life by the mischief he has kindled and is present at the concluding scenes. Arjuna, humbled beyond words, promises that he will never more set eyes on other women.

Thus ends one of the finest comic episodes from the Mahabarat.

கிருஷ்ண பிடாரன்

அல்லது

பீமார்ஜுன கர்வ பங்கம்

கதைச் சுருக்கம்

மஹாபாரத யுத்தம் முடிந்து, பஞ்சபாண்டவர்கள், இந்திரப்ரஸ்த நகரில் சௌக்யமாய் இருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறார்கள். கோகிலாஷ்டமி தினம். திரிலோக சஞ்சாரியான நாரதர், பாண்டவர்களைப் பார்த்துப்போக வருகிறார்.

முதலில் நகுல ஸகாதேவர்களைச் சந்தித்து அவர்களை ஆசீர்வதித்து, பீமார்ஜுனரைப் பார்க்க வருகிறார். பீமார்ஜுனரை ஆயுதசாலையில் சந்தித்து அவர்கள் மமதையை உணர்ந்து கர்வத்தைப் பங்கப்படுத்த யோசிக்கிறார். இதன் மூலம் ஓர் கலகத்தை ஏற்படுத்த நாரதர் தீர்மானித்து துவாரகை வருகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணன் பூஜாக்ரஹத்திலிருக்கிறார். நாரதர் அவரைச் சந்தித்து, அவர் பூஜை செய்யும் கடவுள் பக்தர்கள் பாததூளியென அறிந்து ஆச்சரியப்படுகிறார். பீமார்ஜுனர்கள் கர்வத்தை கிருஷ்ணனுக்குத் தெரிவித்து அவர்களுக்குத் தக்க புத்திமதிகள் கற்பிக்கவும் ஏற்பாடுசெய்து திரும்புகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனைப் பாம்பாகவும், கருடனைக் குதிரையாகவும், தான் ஒரு பாம்பாட்டியாகவும் மாறி இந்திரப்ரஸ்தம் நாடி வருகிறார்.

பாம்பாட்டி இந்திரப்ரஸ்தம் அடைந்ததும், அவுல்தார் குப்புலிங்கம் என்பவனிடம் தன் குதிரையை ஒப்புவித்துச் செல்ல, அவுல்தார் அக்குதிரைமீதேற குதிரை பறந்து ஒரு மாயத்தீவில் அவனைத் தள்ளிவிட்டு திரும்புகிறது.

மாயத்தீவில் ஸ்ரீ கிருஷ்ணன் மாயா ராணியாக அநேக ஸகிகளுடன் நீர் விளையாடிக்கொண்டிருக்கிறார். அவுல்தார் குப்புலிங்கம் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டு அத்தீவிலேயே மாயப்பெண் ஒருவளுடன் வசிக்கிறான்.

பாம்பாட்டி இந்திரப்ரஸ்தம் தெருவிலேயே சபதம் கூறிச் செல்கிறான். தன் பாம்பைத் தூக்கவும், தன் குதிரை மீதேறி

சவாரி செய்யவும் எந்த வீரராலுமாகாதென்றும் கூறி பஞ்சபாண்டவர்களையும் இகழ்ந்து பேச தருமர் சபைக்கு கொண்டுவரப்படுகிறான்.

சபையிலும் பாம்பாட்டி தன் சபதத்தைத் தைரியமாகக் கூறி பீமார்ஜுனர் இருவரும் அவன் சபதத்தைப் பூர்த்தி செய்வதாக முன் வருகிறார்கள். அவர்கள் தோல்வியுற்றால் கேட்டதைத் தரும்படி பாம்பாட்டி தருமரிடம் வாக்குறுதி பெறுகிறான்.

அர்ஜுனன் குதிரைமீதேறவும், குதிரை பறந்து அர்ஜுனனையும் மாயத்தீவில் கொண்டுவந்து சேர்த்து திரும்புகிறது. பீமன் பாம்பைத் தூக்க, பாம்பு பீமனைச் சுற்றி நாகலோகத்தில் சேர்த்து விடுகிறது.

அர்ஜுனன் அவுல்தார் குப்புலிங்கத்தைச் சந்தித்து அவன் மூலம் மாயா ராணியின் சிநேகம் பெறுகிறான். மாயா ராணியைக் காதலித்து அவள் காதலில் ஈடுபட்டு ராஜ்யத்தையும் மறந்து இருக்கிறான்.

பீமனோ நாகலோகத்தில் நாகராஜன் கைதியாக நாகக் கன்னிகைகளால் அவமானப்படுத்தப்பட்டு இருந்து வருகிறான்.

பாம்பும் குதிரையும் திரும்பிட, பாம்பாட்டி தரும ராஜனைத் தான் கேட்பதைக் கொடுக்கும்படி கேட்கிறான். தருமரும் சம்மதிக்கிறார். பாம்பாட்டி ராஜ்யத்தையே கேட்க, நகுல ஸகாதேவன் மறுத்து தாங்களிருவரும் பந்தயத்திலிறங்குகிறார்கள்.

அர்ஜுனன் மாயை வலையில் ஈடுபட்டு அநேக கஷ்டங்களுக்கு ஆளாகிறான். இறுதியில் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனை நினைத்ததும், சகாதேவன் வந்து காப்பாற்றி அர்ஜுனனையும் குப்புலிங்கத்தையும் இந்திரப்ரஸ்தம் அழைத்து வருகிறான்.

பீமனும் நாகலோகத்தில் அநேக கஷ்டங்களுக்குள்ளாகி கடைசியில் கிருஷ்ணனை நினைக்க அதுசமயம் நகுலன் வந்து அவனைக் காப்பாற்றி இந்திரப்ரஸ்தம் அழைத்து வருகிறான்.

தருமர் சபையில் பெரும் குழப்பம் ஏற்படுகிறது. சென்ற சகோதரர்கள் ஒருவரும் திரும்பாதலால் பந்தயப்படி பிடாரனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க சம்மதிக்கிறார். திரௌபதி தடுக்கிறாள். அது சமயம் மாயா ராணி தன் தோழியுடன் அர்ஜுனனைத் தேடி அங்கு வர குழப்பம் அதிகரிக்கிறது. நாரதர் பிராப்தமாகி, அவரிடம் யாவரும் யுக்திகேட்க அவரும் பிடாரனுக்கே ராஜ்யத்தை கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார். தருமனும் சம்மதித்து பிடாரனுக்கு

ராஜ்யத்தை தத்தம் செய்யும் சமயம் சகோதரர்கள் யாவரும் திரும்புகிறார்கள். யாவரும் சந்தோஷிக்கிறார்கள்.

பிடாரன் வாக்குப்படி பஞ்சபாண்டவர்களுக்கு அடிமையாகி நமஸ்கரிக்கிறான். எழுந்திருக்கும்போது பிடாரன் கிருஷ்ணனாக மாறியிருக்க யாவரும் அவர் காலில் வீழுகிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாம் பீமார்ஜுனரின் கர்வத்தையடக்க தன் மாயாஜாலத்தாலேற்பட்டதென்பதை விளக்கிக்காட்டி பலராமர் கருடன் முதலானவர்களுடன் துவாரகை திரும்புகிறார்.

" கிருஷ்ண பிடாரன் "

(காமிக் கதை)

N. S. கிருஷ்ணன்—T. A. மதுரம் & பார்ட்டி

கடவுள் பக்தி சிறிதுமில்லாத பாகவதர் தன் மனைவியிடம் மற்ற பாகவதர்களை குறை சொல்ல, மனைவி மற்றவர்களை குறை சொல்வது தப்பு என்று பாகவதருடன் சண்டை போடுகிறாள். அவுல்தார் மனைவி பாகவதருக்கு வேஷ்டி இனாமாகக் கொண்டுவந்து கொடுக்க அவளைத் தொட்டு நாமம் போடுவதைப் பார்த்த மனைவி, பாகவதரிடம், பெண்களிடம் மரியாதையாகவே நடந்துகொள்ளும்படி சொல்கிறாள்.

பாகவதரிடம் அவுல்தார் மனைவி வந்து, தன் புருஷன் காணாமல் போய்விட்டதை தெரிவிக்கிறாள். பாகவதர் அவளை கெடுக்க நினைக்கிறார். பெண் அண்ணன் வந்து சமாதானம் செய்து தன் ஊருக்கு அழைத்துச் செல்கிறான். பாகவதரையும் நாலு நாள் பொருத்து கச்சேரிக்கு வரும்படி சொல்லிப் போகிறான். பாகவதர் கச்சேரிக்கு போக மிருதங்கக்காரனில்லாமல் தப்படிக்கிறவனை கூட்டிக்கொண்டு வந்து தயார் செய்கிறார்.

கச்சேரியில் மிருதங்கக்காரனாலே அவஸ்தைப்பட்டு உதைபட்டு ஓடி வருகிறார்.

மனைவி, புருஷன் கச்சேரி செய்து பெருமையாக வருவாரென்று நினைத்து ஏமாறுகிறாள். பணம் கொண்டுவந்தீர்களா என்று கேட்க பணத்துக்கு பதிலாக நாமம் போட்டான் என்று சொல்ல, இனியாவது நிஜமான பக்தியோடு பகவானைத் தொழும்படிச் சொல்ல, பாகவதருக்கு புத்தி வந்து பஜனை செய்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கு ஜே !

ம ங் க ள ம் .

கிருஷ்ண பிடாரன்

அல்லது

பீமார்ஜுன கர்வ பங்கம்

பாட்டுகள்

N. S. கிருஷ்ணன் & பார்ட்டி

(பஜனை)

கிருஷ்ண முராரே
கேசவ முராரே
மாதவா உறரே முகுந்த
கோவிந்த முராரே.
கிருஷ்ண நந்த முகுந்த முராரே
வாமன மாதவ கோவிந்த
ஸ்ரீதர கேசவ ராகவ விஷ்ணு
லெக்ஷிமி நாயகா நாசிம்மா
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் கோபாலம்
விந்தம், விந்தம், விந்தம், விந்தம்
விந்தம் விந்தம் கோவிந்தம்
ரங்கம், ரங்கம், ரங்கம், ரங்கம்
ரங்கம் ரங்கம் ஸ்ரீரங்கம்
வரதம், வரதம், வரதம், வரதம்
வரதம் வரதம் கலிவரதம்
ஜே ஜே கிருஷ்ண, ஜே ஜே கிருஷ்ண (கிரு)

தருமர் திரௌபதி—பாட்டு

(ஹிந்தி மெட்டு)

ஸ்ரீ ஹரிமுகுந்தா—ஸ்ருதஜனபாலா
ஸ்ருதஜனபாலா—ஸ்ருதஜனபாலா
வையகம்தனில் உனையன்றி மற்றொரு துணை
யாருமில்லையினி அருள்புரிவாயே (ஸ்ரீ)

கோபியர் மகிழும் கோகுல சீலா
குவலயம்புகழும் ப்ருந்தாவனலோலா
சோபிதாங்க—சுகிர்தசல்லாபா
சுகிர்த சல்லாபா—சுகிர்த சல்லாபா (ஸ்ரீ)

அர்ஜுனன்—பாட்டு

கேதாரம்-ராகம்.] [ஆதி-தாளம்.

எமக்கு நிகர் எவரேனும்
உலகில் உண்டோ
இதில்—ஏதும்—தடையுமில்லை (எ)
சமர்க்களத்தில்-பல சாலிகள் எவரையும்
சடுதியினில்-தவிடுபொடி படவே செய்யும் (எ)
ஈசனோடெதிர்த்து பாசுபதாஸ்திரம்
ஏற்ற புனிதன் அன்றோ
தாசனும் சந்த்ரஹாசனும் எமக்கு
தணிந்துபதம்-பணிந்துமனம்-மகிழ்ந்திட (எ)

குப்புலிங்கம்-குமுதம்—பாட்டு.

(ஹிந்தி வர்ணமெட்டு).

யாரென்றென்னை எண்ணுகிறாய் நீ
அறிவாயே-நானே-அவுல்தார்
எவரும் பயந்தே—யினிமேலே என்
எதிரே பேசவும் நடுங்கிடுவார்
போதும் போதும் வாயை மூடு உன்
பவுஷெல்லாம்—அறிவேனே நான்
அவுல்தார் பட்டம் கிடைச்சால் என்ன
வவுறே நிறைஞ்சு போயிடுமா
பாரடி யினிமே—வீடு முழுதுமே
பணமாய் எங்கும் குவித்திடுவேனே
ஆனால் நாளை வெடிஞ்சாத் தெரியுது
அவுல்தாரய்யா புளைப்பேதான்

மாயாராணி—பாட்டு.

(ஹிந்தி வர்ணமெட்டு)

நீராடிடுவோம்—மகிழ்வாய்
சீராய் யாவரும்கூடி திறமுடனே விளையாடி

தெள்ளிய நீரில்துள்ளு மீன்கள் ஆர்பாட்டம்
உள்ளமதே யினிதாக மகிழவே
தாமரை நிரைந்த தடாகமும் இதுவே
தரணியிலே—மிகவே
இன்புற மனமே—இது சுபதினமே
என்ன மனோஹரமே
விந்தையான பல மலர்களின் வாசம்
தேன்றலோடு மணம் வீசும்
நேரமிதுவே சுகமது பெறவே வாரும் அனைவருமே

N. S. கிருஷ்ணன் & T. A. மதுரம்.

கோ.—போதுமே சாகஸம்
மாது நான் அறியேனோ
ஆச்.—ஏதுமே மாது நான்
தீது செய்தறியேனே (போது(
கோ.—சூதும் வாதும் வேதனை செய்யும்
ஈதை நீர் அறியீரோ
ஆச்.—வேதனைவரும் வேளைதனிலே
மாதுனை விரும்பேனோ
ஆச்.—கோபமேனோ கோமள மானே
கோ.—கோமளம் நானில்லை போனவள் தானே
ஆச்.—பாபம் அன்னியமாதரை நினையேன்
கோ.—பார்த்ததில்லையென பகர்வது சரியோ
ஆச்.—பார்த்ததும் பொய்யே
கேட்பதும் பொய்யென
பாவை நீயறியாயோ (போது)

பாம்பாட்டி—பாட்டு.

(தெம்மாங்கு வர்ணமெட்டு)

பாம்பாட்டி நானே
பதுங்கி வருவேனே
நான்பாட்டிலே சும்மா
நாளைக் கழிப்பேனே (பா)
ஆட்டிவைப்பேனே—பாம்பை
ஆட்டிவைப்பேனே—உலகை
ஆட்டிவைப்பேனே

நல்ல நல்ல பாம்பு
நான் வளர்த்த பாம்பு
நாடறிந்த பாம்பு
நாகரீகப் பாம்பு
தேடிவரும் மாதரிடம்
ஓடிவரும் பாம்பு (பா)
குதிரையிதைப்பாரு—அதன்
குணங்களுமே வெகுசீறு
குந்தியிதன்மேலிருந்து சவாரி
செய்யும் தீரன் யாரு (பா)

பாம்பாட்டி சபதம் பாட்டு

மோகன-ராகம்.] [ஆதி தாளம்.

பாரில் என் குதிரைமேல்
ஏறி சவாரி செய்
வீரன் எவனும் உண்டோ
உண்டோ உண்டோ (பா)
யாருமிருந்திடில்
வாரும் என் முன்னே
எவர்க்கு மஞ்சேன்
எதற்கு மிஞ்சேன் (பா)
பாம்பைத்தூக்கும்
பலசாலிகள் உண்டோ
பந்தயமிதை ஜெயிப்
பார்களும் உண்டோ
யாருமிலைக்கூறிடுவீர் சீர்மிகும் (பா)

மாயாராணி—பாட்டு.

ஹமசத்வொனி-ராகம்.] [ஆதி-தாளம்-

மாலை நேர மிதுவே
மனோரம்ய மிகு—வானிற—ஒளியே
மாறிடும் நிலையே (மா)
மா பலா கமுகு மரங்க ளநேகம்
வானளாவி வளர்ந்திடும் வனமும்
மதுர-மொழிகள்-சொறிய
கிளிகள்-தினமும் மனமே (மா)

ஜோடி ஜோடியாய் பறவையினம்
கூடி வாழ்ந்திடும் குதூகலமும்
ஓடித் துள்ளியே உலவிடும் மானும்
உன்னத குயிலின் உயரிய கானம்
தேனையே பருகி திரண்டுமே கூடும்
வண்டினங்களின் ரீங்காரம்
தொனியும்-இனிய-இசையும்-பரவும் (மா)
தினமே—இன்பமே மிகுந்த (மா)

N. S. கிருஷ்ணன் & T. A. மதுரம்.

ஆச்.—போட்டு விட்டான்
கொள்ளச்சு நாமம்
கோ.—நான் முன்னமே தான் சொன்னேனே
நாமம் போடாதீர் என்று தானே நானே
ஆச்.—நொந்த புண்ணிலே எறியும்
பந்தம் விடுவதைப்போல
இந்த வித கேலி செய்யலாமா (போ)
கோ.—புத்தியில்லா உத்தமரே உமக்கு
புத்தியும் வந்ததோ இதனாலே இனிமேலே
ஆச்.—சத்தியமாக நிஜ பக்தியதாய் பஜனை
நித்தியம் செய்வேனடி மாதே
அடி மாதே, கேட்டுக்கோ ராம் ராம்
ராம், ராம் (போ)

திரௌபதி—பாட்டு.

பியாக்-ராகம்]. [ஏக-தாளம்.

சென்றவர்கள் திரும்பிடாத
செய்தி காண்கிலேன்
இன்றதனால் மனம் வருந்தி
ஏங்கலாகினேன்
நன்றிது உந்தன் சோதனையோ
நந்த பாலனே
நாயகன்மார்கள் க்ஷேமம் என்றும்
நாடும் சீலனே

காமிக் பாட்டு

(தெம்மாங்கு வர்ணமெட்டு)

ஏண்டி சும்மா பணம் பணம் என்று குதிக்கிருய்
இப்படிச்சும்மா என்னைப்போட்டு வதைக்குருய் (ஏ)
பணம் இல்லாட்டி ஏது இந்த கொண்டாட்டம்
பகுத்தறிவே யில்லாட்டிதான் திண்டாட்டம்

(வசன நடை)

வாயைக்கட்டி வவுத்தைக்கட்டி
வச்சிருந்த பணம் யெல்லாம்
வாரியிறைச்சி ஒளிச்சுப்போட
வந்ததோ உன் குணமெல்லாம்
போடிபோ புத்தியில்லா மூடமே—சும்மா
பேத்துகிருய் நித்தம் யிந்த பாடமே

(வசன நடை)

யாருக்கிந்த பணத்தை எல்லாம்
சேர்த்துவைக்கப் போகிருய்
பேருக்கொரு பிள்ளையுண்டா
குட்டியுண்டா பேசுருய்
போய்யாபோ புத்திகெட்ட மனுஷனே-உன்னை
உன்னை புருஷனுகக் கொண்டதாலே வேதனை
ஏதுக்கடி சும்மாயிந்த போராட்டம்
எப்போதுமே யிருக்கு இந்த சீராட்டம் (ஏ)

மாயா அர்ஜுனன்

சுத்த தன்யாசி-ராகம்] [ஆதி-தாளம்

உனையினி நானே இணை பிரியேனே
உறுதியாகும் இதுவே
உம்மை யறிந்தேன் உள்ளமதே உவமைமிகுந்தே
மனமது இசைவேனே
தடையுமேன் எனைத் தழுவியே அணைய
தினமே சுப தினமே ஸரஸம் புரியவே
ஸமயமும் இதுவே
நிஜமா—நிஜமே இனிக்கணம் பிரியோமே
மனமகிழ் வடைவோமே

மாயப் பெண்

(டான்ஸ் பாட்டு)

உண்மை—மாயா
உலகமிதே அறிவீரே
காண்பதெல்லாம் ஒரு கனவெனத் தெறிவீர்
தோற்றம்-வீண்-தோற்றம்
ஏமாற்றமே தரும்
ஆட்டமும் மாயை
அனைத்துமே மாயை
மாயை-இது-மாயை.

ஸகாதேவன் விருத்தம்

ராகமாலிகை

ஜெயது ஜெயது மந்தரம்
ஜென்ம ஸாபல்ய மந்தரம்
ஜனனமரண பேதக்லேச
விச்சேத மந்தரம்
ஸகல நிகம மந்தரம்
ஸர்வ ஸாஸ்த்ரைக மந்தரம்
யாதவகுல நிஜ மந்தரம்
ஸ்ரீ கிருஷ்ண கிருஷ்ணேதி மந்தரம்.

திரௌபதி—ப்ாட்டு

ஆரபி-ராகம்]. [ஆதி-தாளம்.

கண்ணா—கார்முகில் வண்ணா கமலக்
காலடி போற்ற ஏக
காலமும் மறவேன்
அண்ணலே நீயுன்
அடியவர்க் கென்றும்
அருள்புரி அமுதன்றோ (க)
விண்ணவர் குறை தவிர்த்தாள் எசோதை
மைந்தனல்-தரணியில் அவதரித்த (க)
ஸாமள ரூபா—ஸாது ஜனாபா
சாந்த ஸ்வருபா—சரணப்ரதாபா
மாமறையோர் புகழ்—மங்கள தேகா
மாதவ சீல—உதார குணா—கர (க)

மாயாராணி—பாட்டு

(ஹிந்தி வர்ணமெட்டு)

இதுபோல வேறு சுகம் இல்லையே
இனிதான நேரமிதே (இ)

(தொகையரு)

மதனும் ரதியுமினி இருவரும் நாமே
மனம்போல வாழ்வோமே
ப்ரேமை மீறிய வார்த்தையி தாமே
பிரியமதே அறிந்தேனே (இ)
உடலிரண்டும் வேறேயாகினும்
உயிர் நமக்கொன்றேதான்
இன்பமீதாகும் துன்பமே நீங்கும்
இனி நமக்கிணை யில்லையே (இ)
சந்திர னொளியே வீசுவதாலே
சிந்தையும் மாறிடுதே
இந்திர போகம் இதுவன்றி வேறே
எந்தனுக்கே யிலையே இனிமேலே (இ)

அர்ஜுனன்—பாட்டு.

கரகரப்பிரியா-ராகம்]. [ஆதி-தாளம்.

ஆதரித்தாள் தேவா எனக்
கார்த்துணை சொல் இறைவா (ஆ)
வேதனை தாளேன் மாதவனே
வேறு கதியில்லை தேறுதல் நீயே (ஆ)
மாயையின் மோகமதால் உனையே
மறந்திடலானேன் இரங்கிடுவாயே
சேய் பிழை செய்தால் தாய் வெறுப்பாளோ
தேவ தேவனே இவையாவும் உன் செயலோ (ஆ)

அர்ஜுனன்—விருத்தம்.

வணங்கிடும் தெய்வமாய் வனிதையர் கணவனை
வழிபடும் தேசமிதிலே
அணங்கிவள் தோன்றியும் அனியாயமாய் என்னை
ஆட்டியே வாட்டுகின்றாள்
இணங்கியே இவளிட்ட ஏவலைச் செய்யவோ
ஈசன் என்னைப் படைத்தான்
மணங்கமழ் மலரிடை வளர்ந்திடும் முள்போல
மாதிவள் சேர்க்கையாமே

எங்கும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும்

லக்ஷ ரூபாய் நடிகை

ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாளின்,

கந்தர்வ கானங்கள் நிறைந்த தமிழ் புராணப்படம்

N. S. கிருஷ்ணன் .... T. A. மதுரம்

நகை சுவை ஹாஸ்யம் மிக்குள்ளது.

வெள்ளித்திரையுலகில் நிகரற்ற புகழ்பெற்றோர்
ஒன்றுசேர்ந்து நடிக்கும் எமது 1942-ம் வருஷத்திய
மகோன்னத சித்திரம்

மகிதலம் மகிழும்
இசை அரசி

ஸ்ரீமதி K. B.
சுந்தராம்பாள்

மறு முறை தோன்றும்

அருந்ததி

(புராண தமிழ் படம்)

ஆந்திர நடிக நட்சத்திரம்
சி. வி. நாகய்யாவின்—சிறந்த நடிப்பு
ஹாஸ்ய கேசரி N. S. கிருஷ்ணனின்—நகை சுவை காமிக்
இளங்கோவனின்—சரள நடை வசனம்
கச்ச தேவயானி புகழ்
T. R. ராஜகுமாரியின்—கண்கவர் வனப்பு
ஹாஸ்ய ராணி T. A. மதுரத்தின்—இனிய சாகஸ லீலைகள்
வடநாட்டு நடிகை லீலா தேசாயின்—உயரிய நடனம்
மற்றும் பல சினிமா புகழ் நட்சத்திரங்களை கொண்டு
ராஜா சந்திரசேகரின்
மாயாஜால டைரக்ஷன்கூடிய பேசும் படம் உங்கள் ஆவலை
பூர்த்திசெய்ய விரைவினில் வெளிவர தயாராகிறது!

எதிர்பாருங்கள்!! எதிர்பாருங்கள்!!

புக்கிங்குகளுக்கு:—
தி டி. கே. புரொடக்ஷன்ஸ்,
24-25, நரசிங்கபுரம் தெரு, மவுண்ரோட், மதராஸ்.

SELVARANGAN PRESS, MADRAS.